# மக்கள் மறு வாழ்வு

மலர் : 4 மார்கழி-டிசம்பர் 1985 விலை 75 காசுகள் இதழ் : 3



## இலங்கை கிராமிய தொழில் அபிவிருத்தி அமைச்சர்

# தொண்டமான் தமது பதவியை விட்டு விலகுவாரா ?

**இந்த ஆண்டு டிசம்பர் 31ந் தேதிக்குள் மலையக மக்களின் அடிப்படைப் பிரச்சனைக்குத் தீர்வு காணாவிட்டால் அமைச்சர் தொண்டமான் பதவி விலகுவாரா?**

திரு. தொண்டமான் இலங்கையின் கிராமிய தொழில் துறை அபிவிருத்தி அமைச்சராக இருக்கிறார். மலைத் தோட்டத் தொழிற் சங்கமாக இருக்கிற இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவராகவும் இருக்கிறர்.

இச் சங்கத்திலேயே மலைத் தோட்டங்களில் இருக்கும் பெரும்பான்மையான இந்திய தமிழர்கள் அங்கம் வகிக்கிறார்கள். இந்தியத் தமிழர்களுக்கு திரு, தொண்டமானே முதன்மையான தலைவராகவும் இருக்கிறார்.




ஈழப்புரட்சி அமைப்பு (ஈரோஸ்) வெளியிட்டுள்ள சுவரொட்டி இது

(செய்தி உள்ளே)

டிசம்மர் மாதம் முடிவுக்குள் குடியுரிமை மற்றும் அடிப்படைப் பிரக்கனைகள் தீர்க்கப் படாவிட்டால் தமது தலைமை தோற்று விட்டதாக அறிவித்த தோடு பதவி விலகுவேன் என்றும் தெரிவித் திருந்தார்.

சமிபத்தில் இலங்கையிலிருந்துவெளிவரும் 'தினசரிக்கு' அளித்துள்ள முடிவில், தாம் பதவி விலகப் போவதாக அறிவித்த போட்டியில் எந்த வித மாற்றமும் இல்லை என்று தெரிவித்திருக்கிறார்.

ஜெயவர்த்தனாவின் அரசில் மந்திரியாக இருக்கும் திரு தொண்டமான், '' ஜெயவர்த்தனா இலங்கைத் தமிழர்ப் பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பார். என்று நம்பிக்கை தெரிவித்து வந்திருக்கிறார். ஈழம் பிரிவதன் மூலம் மலையகத் தமிழ் மக்கள் பிரச்சனைத் தீர்ப் போவதில்லை; ஈழப்பிரச்சனை பேது; மலையகத் தமிழ் மக்கள்பிரச்சனை வேறு. மலையகத் தமிழ் மக்கள் பிரக்சனையை தாங்களே தீர்த்துக் கொள்வோம் என்று திட்டவட்டமாக தெரிவித்திருக்கிறார்.

இவர் தமிழகம் வரும் போதெல்லாம் பேசிய கருத்துகள் தமிழ் மக்களை கவலைக்குள்ளாக்கியது. இவர் தமிழர் துரோகி என்றும் தமிழ் ஏடுகள் வர்ணித்தன. மலையகத் தமிழ் மக்களைப் பொருத்தவரை இவர் இருக்கும் நிலை,

# மக்கள் மறு வாழ்வு

மலர் 4 மார்கழி 1985 இதழ் 3


## வந்தாலும் துன்பம் வராவிட்டாலும் வேதனை!

மழை வந்தாலும் துன்பம்; மழை வராவிட்டாலும் வேதனை என்ற நிலையில் தான் நாம் இருக்கிறோம்.

கடந்த மாதம் நடுப்பகுதியில் அடித்த புயல் - மழையில் எங்கும் வெள்ளம் புகுந்து பல்லாயிரக்கணக்கானவர்கள் வீடிழந்தார்கள், தமது உடமைகளை பறிகொடுத்தார்கள். சிலர் தமது இன்னுயிரையும் இழந்தார்.

விவசாயிகள் பெரும் நட்டத்திற்குள்ளானார். முத்து முத்தாக விளைந்து அறுவடையிடும் தறுவாயில் இருந்த நெல் மணிகளையும்... பிற தானியங்களையும் வெள்ளத்தில் இழந்தார்கள்... ஆக மழை என்றாலே ஆபத்தானது என்கிற அளவிற்கு நிலைமைகள் இருக்கின்றன.

மழை வராவிட்டாலும் கஷ்டம் தான் வானம் பொழியா மரட்சி; விவசாயத்திற்கு தண்ணீரில்லை; குடிப்பதற்கு நீர் இல்லை.

வானம்பார்த்த பூமி நம்முடைய பூமி,மழையைப்பார்த்துதான் புல்பூண்டுகள் வளரமுடியும்;உணவுபயிர் விளைய முடியும் உயிரினங்கள் வாழமுடியும்.

பெய்கிறமழை நீரை தேங்கவைக்கவும்—பாதுகாக்கவும் தான் அந்நாளிலிருந்து ஏரிகளையும், கண்மாய்களையும் உருவாகி பாதுகாத்து வருகிறோம்.

ஆனால் நமது ஏரிகளும், கண்மாய்களும் மழை வந்து வெள்ளம் நிறைந்து விட்டால் போதும்;உடைப்பெடுத்து ஒடுகின்றன,ஊரை அழித்து விடுகின்றன.

ஏரிகளையும், கண்மாய்களையும் கரைஉடைப்படாது இருக்கும் வகையில் பராமரிக்க வேண்டும்.

அப்போது தான் மழை நீரை நாம் வீணடிக்காமல் சேகரித்து வைக்கலாம்; ஊரையும் அழிக்கவிடாதுபார்க்கலாம்.உணவுப் பயிர்களையும் உற்பத்தி பண்ணலாம்; வறுமை நீங்கி வளமும் பெறுகமுடியும்.

### ஈரோஸ் சுவரொட்டி தாக்கம்:

## கைது-வேலை நிறுத்தம்

முதல் பக்கத்தில் இடம் பெற்றுள்ள சுவரொட்டி சென்னை நகரமெங்கும் ஒட்ட பட்டு காட்சி அளிக்கின்றன. இங்சுவரொட்டிகள் இலங்கையிலும் யாழ்பாணம்—மலை நாட்டு பகுதிகளிலும் ஒட்டப் பட்டுள்ளனவாம்.

இச்சுவரொட்டி இலங்கையில் பெருந்தாக்கத்தை உண்டாக்கி இருக்கிறது.

குடியுரிமை\ சட்டத்தின் மூலம் மலையகத்தமிழ் மக்கள் நாடற்றவர்களாக்கப் பட்ட நவம்பர் 15-ந்தேதி யாழ்ப்பாணத்தில் ஹர்த்தால் நடை பெற்றிருக்கிறது.

மலைநாட்டில் - அட்டனில் ஏதேனும் நடக்கலாம்-அதற்கு ஏற்பாடுகள் செய்வார்கள் என்ற சந்தேகத்தில் மூன்று மாணவர்கள் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள். இதைத் தொடர்ந்து அன்று அட்டனிலுள்ள மிகமுக்கிய கல்லூரிகளிலொன்றானஹைலன்ட்ஸ் கல்லூரி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறது.

அன்று மலைநாடெங்கிலும் பலர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் தோட்டங்கள் எங்கும் தொழிலாளர் மத்தியில்- குறிப்பாக தோட்டத்து இளைஞர் மத்தியில் போலீஸாரின் துன்புறுத்தல்களும், கெடுபிடிகளும் தோன்றியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த இருவரைத்தவிர அட்டன்ச நகரத்தைக் சேர்ந்த பகீரதன், சுகுமார் என்ற வேறு இருமாணவர்களும் இனம் தெரியாதவர்களால் கைதி செய்யப் பட்டிருக்கிறார்கள்.

இவ்வாறு இவர்கள் மர்மமான முறையில் இவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதால் அட்டன் ஹைலன்ஸ் கல்லூரி உட்பட நகரிலுள்ள கல்லூரிகளுங்கு மேல் வகுப்பு மாணவர்கள் வகுப்புகளுக்கு செல்லவில்லை. பாடசாலைகளுக்கு மட்டுமல்ல வெளியே தமது பிள்ளைகளை அனுப்ப பெற்ரோர்கள் அஞ்சும் நிலைஏற்பட்டுள்ளது.

ஹல்கரனோயா (ராகலை) வைச்சேர்ந்தசென்லியனாட்ஸ் தோட்டத்தின் சூபர்வைசர் எஸ். விஜயராகவன் என்பவரும் கைது செய்யப் பட்டிருக்கிறார். இதன் விளைவாக அப்பகுதிகளிலும் பதட்ட நிலைமை ஏற்பட்டுள்ளது.

மலையகத்தில் இலைஞர்கள் தீடீர் தீடீரென கைதுச் செய்யப்படுவது பற்றியும், 60 இளைஞர்கள் குற்றம் சாட்டப் படாமலும், நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படாமலும் தடுத்து வைக்கப் பட்டுள்ளது பற்றியும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுக் செயலாளர் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கு கடிதம் எழுதியுள்னார்;

தொழிலாளர் தேசீய சங்கப் பொதுச் செயலாளர். பி ஸி. தந்லையார் கண்டனம் தெரிவித்துள்ளார்

## தோட்டங்களில் தாக்குதல்

மொஸ்லாந்தை அம்பரகலை தோட்த்தில் தொழிலாளர்க்ள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட காடைத்தனத்தைதொடர்ந்து அப்புதளை, பண்டாரவளை, பகுதிகளில் தொழிலாளர்கள். மேற்கொண்ட வேலை நிறுத்தம் பதுளை, பசறை, வெளிமடை, மடுல்சீமை, நுணுகலைப் பகுதிகளுக்கும் பரவியுள்ளது. இது பிற பகுதிகளுக்

(11-ம் பக்கம் பார்க்க)

### காவல்; வன, தீயணைப்புத் துறைகளின் வாய்ப்பு :

# தாயகம் திரும்பியோருக்கு 'உடல் அளவில்' சலுகை அளிப்பார்களா?

இலங்கை இந்திய உடன் படிக்கையின் கீழ் தாயகம் திரும்பிய படித்த இளைஞர்கள், மாநிலம் மற்றும் மத்திய அரசின் குறிப்பிட்ட சிலபணிகளின் தேர்வு செய்யும் கால கட்டத்தில் இவ்விளைஞர்கள் "உடற் அளவு தகுதியின்மை" காரணம் காட்டி தேர்வு செய்யப் படுவதில்லை.

இலங்கை-இந்தியா உடன் படிக்கையின் கீழ் தாயகம் திரும்பும் படித்த இளைஞர் களுக்கு மத்திய மாநில அரசுகள், அரசுப்பணிகளில் தேர்வு செய்யும்போது, கல்வி மற்றும் வயது நிபந்தனைகளில் சிறிது வரம்புகளை தளர்த்தி பணிக்கு அமர்த்த சிறப்பு ஆணைகளை அரசு வெளியிட்டுள்ளதால் இதுபோன்ற ஆணைகளால் சில இளைஞர்கள் இந்நாட்டில் அரசு பணிகளில் சேர்ந்து பணியாற்ற முடிகிறது. அதே நேரத்தில், காவல்துறை, வனத்துறை, தீயணைப்புத் துறை போன்ற பணிக்கட்கு தேர்வு செய்யும் போது, தாயகம் திரும்பிய இளைஞர்களும் வேலை வாய்ப்புத் துறை மூலமும், நேரடி தேர்வுகளிலும் கலந்துக்கொள்கின்றனர்.

இந்நிலையில், மேற்குறிப்பிட்ட துறைகள் தேர்வு அடிப்படைக்கு ஓர் குறிப்பிட்ட உடல் அளவுக் கொண்டவர்களை மாத்திரம் தேர்வு செய்கின்றனர். இவ்வுடற் அளவு இத்துறைக்குபெரிதும் முக்கிய தகுதியாக கருதப் படுவதால் இக்குறிப்பிட்ட உடற்அளவு இல்லாத கல்வி, வயது, திறமை போன்ற தகுதிகள் இருந்தும், 'உடல் அளவு குறைவு' என்ற காரணத்தால் தாயகம் திரும்பிய இளைஞர்கள் வாய்ப்பிழக்கிறார்கள்.

தாயகத்திற்கு திரும்பிய குடும்பங்கள், இந்நாட்டில் அவர்களது புது வாழ்வினை ஏற்படுத்திக் கொள்ள அவர்கள் படும் அவல நிலையில், உடற்சிலவு, பணச்சிலவு மன அலைச்சல் போன்ற சுமைகளை கொண்டிருக்கும் காலக் கட்டத்தில், உடல் வளர்ச்சியை பெருக்கிட, வளர்த்திட வாய்ப்பில்லாமல் போய் விடுகிறது. அரசின் மூலமாவது தனது வாழ்வை அமைத்திட அரசை நாடிடும் இவ்விளைஞர்கள் இக்காரணங்களால் வெளியே தள்ளப் படுவதால் இன்றும் சுமைகளை சுமக்க வேண்டியவர்களாகி விடுகின்றனர்.

இந்நிலையில், சம்பந்தப் பட்ட அதிகாரிகளிடம் கனிவுடன் வேண்டுவதென்னவெனில், இவ்விளைஞர்கள் இத்துறை அதிகாரிகளால், அதிலும், ஒரு சென்டி மீட்டர்கள் உடற் அளவில் குறைவாக இருந்தாலும்தாயகம்திரும்பிய இளைஞர்கள் வாய்ப்பு இழப்பதைத் தவிர்க்க வேண்டும். தாயகத்தையே நம்பி வரும் இவ்விளைஞர்களுக்கு, வயது கல்வி தகுதிகளில் சலுகைகள் வழங்கி வாழ் வூட்டியது போல், உடல் அளவு வரம்புகளில் குறைந்தது 0.5 சென்டி மீட்டர் வரை விலக்கு அளித்திட தகுந்த ஆணை வழங்கிட வேண்டுமென கேட்பதோடு

தாயகம்திரும்பி யார் என்ற நிலையில், இப்பிரச்சினைக்கு நல்ல ஓர் தீர்ப்பை தமிழக அரசு வழங்கிட வேண்டுமென கேட்டுக் கொள்கின்றேன்

ஊட்டி. எஸ்.எம்.




## வீட்டுக் கடனை வழங்குவார்களா?

நான் சிலோன் அகதியாக 28-8-78ல் தாயகம் வந்து பார்வையில் கண்ட (HLO 86 | 81-82 வீட்டுக் கடன் ரூபா 3000/- இரண்டுத் தவணைகளில் முசிறி (மறுவாழ்வு) அலுவலகத்தில் வாங்கி வீடு கட்டி முடித்துவிட்டேன். பாக்கியுள்ள கடன் கிடைக்கவில்லை. வீடு கட்டி குடியேறி 2 வருடங்கள் ஆகிறது.

நான் வீடுகட்ட கிரயம் பெற்ற (மனையில்) சம்பந்தப் பட்ட இடத்தில் வீடு கட்டாமல் இடம் மாற்றி வீடு கட்டிய காரணத்தால் கடன் மறுக்கப்படுகிறது. ரூபாய் 1750/-முதல் தவணை கடன் பெற்று காலனிக்கு சம்பந்தப் பட்ட இடத்தில் வீடுகட்டி விட்டேன். 2-ம் தவணை வழங்க ஸ்தல பார்வையிட தனித் துணை அதிகாரிகள் (மறு வாழ்வு) வந்தார்கள்.

நான்கெல்லை ஆராயும் போது வீட்டுக்குக் கடனுக்குச் சம்பந்தப்படாத இடத்தில்வீடு கட்டியது தெரிந்துகொண்டார்கள். தெரிந்தும் 2-ம் தவணைக் கடன் ரூபாய் 1250 வழங்கப்பட்டது. காரணம் காலனிக்காரர்கள் 26 குடும்பங்கள் கடன் பெறும்போது நிபந்தனையின்றி கடன் வழங்கப்பட்டது என்ற அடிப்படையில் எனக்கும் வழங்கப்பட்டது இருந்தும் செட்டிகுளம் துணை பதிவாளர் அலுவலகத்தில் கட்டிடம் கட்டப்பட்ட இடத்தினை அடமானம் செய்து கொடுக்கச் சொன்னார்கள்.

அதற்குள் இந்த அதிகாரி மாற்றலாகி புதிய (மறுவாழ்வு) அதிகாரி வந்தார். பலமுறை மனு கொடுத்தும் கடன் கொடுக்காத காரணத்தால் 12 குடும்பங்கள் உண்ணாவிரதம் நடத்த முடிவு செய்து மனு கொடுத்தோம்.

....இதனால் தகராறு ஏற்பட்டு அரசுக்கு மனு கொடுத்தோம். இதன் தேதி 3-1-84 புகார் மனு கொடுத்தால் நீ பட்டா வாங்காமல் கடன் கொடுக்கப்படாது என்று கூறி விட்டார்கள். எதுமலை சர்வே எண் 98, 472 ஆகிய இரண்டு எண்களிலும் 21 வீடுகள் சட்டப்பட்டுள்ளன.

நான் தனியாக வீடுகட்ட பயந்துகொண்டுகாலனியோடு சேர்த்து கட்டிவிட்டேன். மீண்டும் மீண்டும் வில்லங்கச் சான்றிதழ் அரசுக்கு அடமானம் போன்ற முறைகளைச் செய்து தருகிறேன் என்றும் கெஞ்சினேன். முடியாது என்று மறுத்துவிட்டனர்.

நான் வீடுகட்டும் இடத்தில் எந்த வில்லங்கமும் இல்லாத அரசுக்கு சொந்தமான புறம்போக்கு நிலம் காலனியில் 26 குடும்பங்கள் வீடுகட்ட எந்த அடிப்படையில் கடன் வழங்கப் பட்டதோ அந்த அதே அடிப்படையில் எனக்கு கடன் வழங்க கேட்டும் பயனில்லை.

வீடு கட்ட ரூபாய் 8420 கடன் பெற்று செலவு செய்து விட்டேன். கடன் நிறுத்தத்தால் மிகவும் அவதிபடுகிறேன்.

ஐயா! நான் விதவை; ஆதி திராவிடர் வகுப்பினர். எப்படியாவது காலனிவாசிகளுக்கு வழங்கியது போல கடன் வழங்க உதவவேண்டுமென வேண்டுகிறேன்.

செல்வமணி

திருச்சி மாவட்டம் ★

# மக்கள் மறுவாழ்வு மன்றங்கள்; அமைப்பு-நிர்வாகிகள் தேரிவு

## வள்ளுவர் நகர்

நீலகிரி, கோத்தகிரி, வள்ளுவர் நகர் தாயகம் திரும்பியோர் மத்தியில் மக்கள் மறுவாழ்வு மன்றம் அமைக்கப்பட்டுள்ளது.

11-10-85 அன்று நடைபெற்ற அங்குரார்ப்பணக் கூட்டத்தில் நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டார்.

நிர்வாகிகள் பின்வருமாறு :-

தலைவர்i திரு. அடைக்கலம், துணைத் தலைவர்: திரு. ஆர். பத்மநாதன், செயலாளர்: திரு வி. தட்சணாமூர்த்தி, துணைச் செயலாளர்: என். பொன்னையா, பொருளாளர்: பி. ரெங்கநாதன், செயற்குழு உறுப்பினர்கள்: திருவாளர்கள் ஏ. பாலசுப்பிரமணியம், எஸ்.கன்னையா. ஏ. மலர்வேந்தன்,ஏ. முடியப்பன், ஆர். ஞானசேகரன், எம். அருள்செல்வம்,எஸ். ராசேந்திரன், ஆர், சண்முகராஜ், எஸ். சுப்பிரமணியம், கே. சுந்தரராஜ், என். சுப்பிரமணியம் ஆகியோர்களாவர்.

## தவிட்டு மேடு

14-10-85 அன்று கோத்தகிரி தவிட்டுமேடு கிராமத்தில் தாயகம் திரும்பியோர் மத்தியில் மக்கள் மறுவாழ்வு மன்றம் அமைக்கப்பட்டது. மன்ற நிர்வாகிகள் பின்வருமாறு தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்: ஏ.வீரமலை, துணை தலைவர்: கே. முருகையா, செயலாளர்: வி. சிறிதர், துணை செயலாளர்: பி.சின்னசாமி, பொருளாளர்: டி. பாலசுப்பிரமணியம், துணைபொருளாளர்: எஸ்.தங்கராஜ்,செயற்குழு உறுப்பினர்கள்: திருவாளர்கள் ஏ, மணி, சி.செல்லத் துரை, பி. பாலகிருஷ்ணன், வி. கே. சௌந்தர், பி. செல்லய்யா, கே.பி. நடராஜ் கே. செல்வராஜ, பி. ஜெகநாதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## ஓம் நகர்

21-9-85 அன்று ஓம்நகர் தாயகம் திரும்பியோர் மத்தியில் மக்கள் மறுவாழ்வு மன்றம் அமைக்கப்பட்டது. மன்றத்தின் நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்: திரு. எம். நாகலிங்கம், செயலாளர்: ஏ. சுப்ரமணி, துணைச் செயலாளர்; எம். வி. பெருமாள், பொருளாளர்: திரு. எம். நடராஜ், செயற்குழு உறுப்பினர்களாக திருவாளர்கள் : கே. ஜெயராமன், எஸ். ஜீவரத்னம், சி. காந்தி, எம். கணேசன், ஏ. ஜான், எஸ். வீரையா, ஏ. பரமசிவம், ஏ. ராஜலிங்கம், எஸ். கனகசபை, ஏ. சந்திரபோஸ், எம், ஜீவா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

O

வியாசர்பாடி:

## மக்கள் மறுவாழ்வுக்கு ஒரு சங்கம்

சென்னை வியாசர்பாடி, சாஸ்திரிநகர் மக்கள் மறுவாழ்வு உரிமை மற்றும் அடிப்படை நலன்களுக்கு பொது நோக்கத்தில் உழைக்கும்பிரதிநிதித்துவம் வாய்ந்த பொதுச் சங்கம் ஒன்றின் தேவைகள் குறித்து பர்மா தமிழர் வீட்டுப் பிரச்சினை சர்வகட்சி நடவடிக்கைக் குழு கூட்டத்தின் முடிவின்படி தாயகம் திரும்பியோர் நல உரிமைச் சங்கம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

21-9-85 அன்று திருவள்ளுவர் திருமண மண்டபத்தில் நடைபெற்ற சங்க அமைப்புக் கூட்டத்தில் பின்வருவோர் நிர்வாகிகளாக தெரிவுசெய்யப் பட்டனர்:—

தலைவர்: திரு. பி. ஏ.ஞானம், துணைத் தலைவர்கள்: திரு. மா. காளிதாஸ், எஸ். சேகராஸ், செயலாளர்: எஸ். ஜோசப், துணைச் செயலாளர்கள்: திரு. க. வீராச்சாமி, எஸ். ஆரோக்கியசாமி, பொருளாளர்: திரு. ஏ. பாக்கியம், பிரச்சாரச்செயலாளர்கள்: திரு ஆ. சண்முகவேலன், இரா.வீ. மோகன், அலுவலகச் செயலாளர்கள்: இரா. பூமிநாதன், அ. வைத்தியலிங்கம், சங்கக் காப்பாளர்: திரு. எம்.ஆர். லிங்கம் பி. ஈ. எம். ஐ. ஈ., கணக்கு தணிக்கையாளர்: திரு. எஸ். பிலிப்ராயர் பி.ஏ. ஆலோசகர்கள் : திருவாளர்கள் அ. வீ. உதயணன், ஏ. ஜான் ஜோசப். ஜி.எம்.இராமநாதன், டி. முத்து.சட்டஆலோசகர்: அட்வகேட் தேவதாஸ்.

மற்றும் பகுதிவாரி பொறுப்பிற்கு பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ளனர்.

Q

குரோம்பேட்டை:

## சமூக நலச் சங்கத்தின் ஆண்டு கூட்டம்

குடிபெயர்ந்தோர் மேம்பாட்டுக்கான சமூகநலச் சங்கத்தின் ஆண்டுக் கூட்டம் குரோம்பேட்டையில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு சங்கத்தலைவர் திரு. ஏ. கலியப்பெருமாள் தலைமைத் தாங்கினார். செயலாளர் திரு. டி. எஸ். ராஜு ஆண்டு அறிக்கை வாசித்தார்.

கூட்டத்தில் கடந்த நடவடிக்கைகள், எதிர்காலத்தில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள், குறித்து பலர் பேசினர்.

இலங்கையிலிருந்துதாயகம் திரும்பி சென்னைப் பகுதியில் குடியமர்ந்திருப்போர்களின் மேம்பாட்டுக்கான நடவடிக்கை எடுக்கவும்-குறிப்பாக வீட்டுப் பிரச்சனையில் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கைகள் எடுக்கவும்-பிற பகுதிகளிலுள்ளோர்களின் சமூக நலனுக்காகவும் இதர அமைப்புகளுடன் தோழமையுடன் ஒருங்கிணைந்து செயல்படுவதென கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

சென்னைப் பகுதியிலுள்ள தாயகம் திரும்பியோர்களை ஒருங்கிணைக்கவும்-உரியபணிகள் செய்யவும், செயற்குழு உறுப்பினர்கள் உட்பட பகுதி வாரி பிரதிநிதிகளும் தெரிவு செய்யப்பட்டார்கள். இறுதியில் திரு. பி. செல்வராஜ் நன்றியறிதலுடன் கூட்டம் இனிது முடிந்தது.

Q

புதுக்கோட்டை:

## தாயகம் திரும்பியோர் கருத்தரங்கு

புதுக்கோட்டையில் தாயகம் திரும்பியோர் ஐக்கிய முன்னணி சம்மேளனத்தின் கருத்தரங்கு 13-10-85ஞாயிறு அன்று கிளை அமைப்பாளர் திரு. கே. கதிரேசன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

கருத்தரங்கில் திரு. வி.ஆர். கணேசன் திரு. கே. சாமுவேல் ரத்தினம் திருச்சி கிளை அமைப்பாளர் திரு.அழகப்பன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

தாயகம் திரும்பியவர்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வழிகோலும் 18 தீர்மானங்கள் நிறைவேற்றறம் பட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், அமைச்சர்களுக்கும் அனுப்பி வைத்தனர். ○

மக்கள் மறுவாழ்வு
சந்தா செலுத்தி விட்டீர்களா?

# இலங்கைப் பிரச்சினையும் இன்றைய அகதிகளும் !

இலங்கையில் ஜெயவர்த்தனாவின் இனவெறி அரசு நாளுக்கு நாள் பல ஆயிரம் 'தமிழர்களைக் கொன்று குவித்து அநாதைகளாக அகதிகளாக் ஆக்கிக் கொண்டிருப்பது இன்றைய சூழ்நிலையில் அனைவரும் அறிந்ததே. இப்படி அகதிகளாக வந்தவர்கள் (மலையக மக்கள் உட்பட) தமிழகத்தில் பல முகாம்களில்



வைத்து பராமரிக்கப்பட்டுவருகிறார்கள். இவர்களுக்கு மத்திய, மாநில அரசுகள் செய்துவரும் உதவிகளுக்கு மிக நன்றியுடையவர்களாக உள்ளார்கள். இருந்தாலும் இவர்களின் தற்போதைய வாழ்க்கைநிலை எதிர்காலத்தைப் பற்றிய சிந்தனைகள்; இடையிடையே தடங்கள் எத்தனை எத்தனை!

இவற்றில் சிலவற்றை இங்கே அறியத் தருகிறேன். இவை யாரையும் குற்றம் கூறுவதற்காகவோ குறை கண்டு பிடிப்பதற்காகவோ அல்ல என்பதை முதலில் அறியவும். இலங்கையில் பல்வேறு பகுதியில் வசித்த பலதரப்பட்ட தொழில்களைச் செய்து வந்தவர்கள் அனைவரும் பாதிக்கப்பட்டு அகதிகளாக ஒரே முகாம்களில் வசித்து வருகிறார்கள். ஆனால் இலங்கையின் இன்றைய நிலையிலும் எந்த மாற்றமும் இல்லை. இனவெறி படுகொலைகளைத் தொடர்ந்த வண்ணமேயிருக்கின்றன. இந்த படுகொலைகளைத் தவிர்க்கும் முகமாக தமிழக அரசியல் கட்சிகள், அமைப்புக்கள், சங்கங்கள் பல போராட்டங்களைச் செய்த வண்ணமேயிருக்கிறார்கள், இந்த போராட்டங்களில் அகதிகள் பங்களிப்பு இருக்கின்றதா? என்ற கேள்விக்கு இடமேயில்லை.

இதற்கான காரணங்களைக் கேட்டால் அகதிகள் 'இந்தியாவின் விருந்தாளிகள்' இதில் கலந்துகொள்ளவோ, போராடவோ குரல் கொடுக்கவோ இவர்களுக்கு அதிகாரமில்லை என்பது போன்ற பதில். ஆனால் இன்றைய ஜெயவர்த்தனே அரசோ தமிழர் பகுதியில் சிங்களவக் குடியேற்றங்களை தடையின்றி செய்து வருகின்றது. இப்படிக் குடியேறும் சிங்களக் குண்டர்களுக்கு ஆயுதப்பயிற்சி அளிக்கப்பட்டு தமிழர்களை அழிக்க வழிவகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

## பிரச்சனைகளுக்கு மத்தியில்

இலங்கை அகதிகள் அனைவரும் மீண்டும் இலங்கைக்குத்தான் திரும்பிச் செல்லவேண்டும் என்று இந்திய அரசால் அடிக்கடி அறிவிக்கப்பட்டுள்ளது- அகதிகள் உயிரைக் காப்பாற்றிக் கொண்டு இந்தியா வந்துவிட்டார்கள். அவர்களால் இலங்கையில் எஞ்சி இருக்கும் தமிழர்களுக்காக எதுவுமே செய்யமுடியாது என்ற கணிப்பு அநேகர் மத்தியில் இருந்து வருகின்றது. தமிழர்களின் விடுதலைக்காக போராடும் போராளிகளாலும் இந்த அகதிகள் மூன்றாம்தர பிரஜைகளாகத்தான் கணிக்கப்படுகிறார்கள். அதற்கான காரணங்களில் இவர்கள் மத்தியிலே சரியான அரசியல் தெளிவு கொண்டு செல்வதற்கான தடங்கல்கள் ஏற்பட்டிருப்பதும் ஒன்று.

இலங்கைப் பிரச்சினை தீர்ந்த பின்னர் இந்த (தமிழகம் வந்த) அகதிகள் திரும்பிச் செல்லும் பட்சத்தில் இலங்கையில் இவர்கள் மூன்றாம் தரப் பிரஜைகளாக கணிக்கப்பட்டு 'தாழ்த்தப்பட்டோர்' என்ற நிலைகூட ஏற்பட சாத்தியக் கூறுகள் உண்டு, இப்படி அகதிகளை எதிலும் சம்பந்தப்படுத்தாதலால் இவர்கள் மத்தியிலே முகாம்களுக்குள் சாதாரண சின்னச்சின்ன விஷயங்களுக்குக் கூட அடிதடி வெட்டுக்களும் ஒருவருக்கொருவர் போட்டி பொறாமைகள், இளைஞர், யுவதிகள் காதல் விவகாரங்கள் இதனால் பெற்றோர் மத்தியில் பிளவுகள் தவிர ஒரு சில சுயநலவாதிகள் ஆதாயம் கிடைக்கத்தக்க வகையில் சில்லறைச் செயல்களில் இறங்கி இலங்கைத் தமிழர்கள் மத்தியிலே இந்திய மக்களுக்கும், உலக நாடுகளுக்கும் இருக்கும் அனுதாபத்தை கெடுத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

## அகதிகள் மத்தியில் அமைப்புகள்

இவர்களில் நடதடிக்கைகள் தமிழர் விடுதலைக்காகப் போராடும் போராளிகள் மத்தியிலும் பெருங் கவலையும் ஏற்படுத்தி இருக்கிறது. இது போன்ற அகதிகளின் பிரச்சினைகளை தங்களுக்குள்ளேயே தீர்த்துக் கொள்வதற்காக அகதிகள் மத்தியிலே ஆரம்ப காலங்களில் சில அமைப்

(10-ம் பக்கம் பார்க்க)

## சர்ச்சைக்குரிய கட்டுரைகள்

மக்கள் மறுவாழ்வில் சர்ச்சைக்குரிய கட்டுரைகள் இடம் பெறுகின்றன. மக்கள் மறுவாழ்வு அவற்றை வெளியிடுவதால், அவற்றில் இடம் பெறுகின்ற கருத்துக்கள் 'மக்கள் மறுவாழ்வுக்கு' உடன்பாடாக இருக்கவேண்டுமென்பதில்லை இவற்றை ஆதரித்தோ எதிர்த்தோ எழுதலாம். ஒரு ஆரோக்கியமான விவாதத்திற்குதீர்க்கமான முடிவுக்கு மக்கள் மறுவாழ்வு களம் அமைத்துக் கொடுப்பதே நோக்கம்.

## 'பிறைசூடி'க்கு பதில்

நவம்பர்இதழில்இடம்பெற்ற 'பிறைசூடி'யின் 'சென்னையில் தொண்டமான்' என்ற கட்டுரை பலரது மத்தியில் ஒரு தாக்கத்தை உண்டாக்கியிருக்கிறது. இதை விமர்சித்து ஒரு கட்டுரை அடுத்த இதழில் இடம் பெறுகிறது.

ஒரு ஆரோக்கியமான விவாதத்திற்கு இது நுழைவாயில் அமைக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறோம்.

—ஆசிரியர்

# இன்றைய சமுதாயத்தில் பெண்களின்

# சமநீதி - முன்னேற்றம் - அமைதி

**ஐக்கிய நாடுகள் அவை (U. N)1976 முதல் 1985 வரையிலான பத்து ஆண்டுகளை பெண்களுக்கு சமநீதி, முன்னேற்றம், சமாதானம் ஆகியவற்றை அடைய முயற்சிகளை மேற் கொள்வ தென்று முடிவெடுத்தது. 1985 ஆண்டுடன் 10 ஆண்டு நிறைவுறுகிறது: இந்த ஆண்டுகளில் பெண்கள் அடைந்துள்ள சமநீதி, முன்னெற்றம் சமாதானம்**

''மங்கையராய் பிறப்பதற்கு மாதவம் செய்திட வேண்டுமம்மா'' கவிஞர் தேசீய விநாயகம் பிள்ளை பாடியிருக்கின்றார்.

பெண்களினுடைய கடமைகளுக்கு ஒரு 'புனிதமும், சிறப்பும்' இருந்தாலும் கூட பெண்களுடைய வாழ்க்கை மிக்க் கொடூரமானதாகும்.

பெண்கள் சமுதாயத்தில் தரம் குறைந்தவர்களாக, வேண்டத்தகாதவர்களாக கருதப்பட்டாலும் அவர்கள் சமூகத்தில் மிக முக்கிய பங்கினை வக்கிறார்கள்.

பிள்ளையை பெற்றெடுத்து வளர்க்கும் தாயாக மட்டுமல்லாது வீட்டில் அனைத்து வேலைகளை செய்யும்வேலை. யாளாகவும் இருக்கிறாள்

காலையில் எழுந்து அடுப்பைப் பற்ற வைப்பது முதல் இரவில் பிள்ளை உறங்க வைத்து தான் உறங்கச் செய்வது வரை அத்தனை வேலைகளும் அவளுடையதே; சமைப்பது, நீர் கொணர்வது, பண்டங்களை கழுவி வீட்டை சுத்தம் செய்வது, ஆடைகளைத் துவைப்பது, குழந்தைகளைக் குளிப்பாட்டுவது, விறகு சேகரிப்பது, கணவனுக்கும் குழந்தைகளுக்கும் வீட்டில் மற்றவர்களுக்கும் உணவு பரிமாறுவது, அவர்கள் கேட்டதை ஏவிய வேலைகளை செய்வது குடும்பத்தைப் பராமரிப்பது அனைத்துமே பெண்களுடையதுதான்.

பெண்கள் வீட்டிற்கு வெளியில் வேலைக்குச் சென்றாலும் வீட்டு வேலைகள் அவளுடையதாகத்தான் இருக்கிறது.

பெண்கள் நகரப்புறங்களில் அலுவலகங்களுக்கு தொழிற்சாலைகளுக்கும், குடிசைத்



தொழில்களுக்கும்வேலைக்குச் செல்கிறார்கள். கிராமப்புறங்களில் விவசாய வேலைகளிலும், தோட்டப் புறங்களில் தேயிலை, ரப்பர், காபி, ஏலம் போன்ற தொழில்களிலும் ஈடுபடுகிறார்கள்:

அவர்கள் வீட்டில் மட்டும் வேலை செய்தாலும் அல்லது வீட்டிலும், வெளியே தொழிலிலும் ஈடுபட்டாலும் ஆண்களைவிட அதிகப்படியாக உழைப்பவர்கள் பெண்கள் தான்.

இப்படி பெண்கள் இல்லறப் நடக்க முக்கிய அறனாக இருந்தும் கூட சிறப்பற்றவர்களாக, வேண்டத்தகாதவர்களாக, துன்பத்திற்குட்பட்டவராகவே கருதப்படுகிறார்கள்

வேத காலத்தில் கூட ஆண் குழந்தைப் பேற்றுக்காகவே ஏங்கினராம். அரேபியர் நாட்டில் முகமது நபிகள் அவதரிப்பதற்கு முன்னர், பெண் குழந்தைப் பிறந்தால் குழி தோண்டிப் புதைத்து விடுவார்கள்,

இந்தியாவுக்கு வந்து இங்குள்ள சமுகங்களை ஆராய்ந்த ஒரு அமெரிக்க ஆய்வாளர் ''ஒரு ஆண் குழந்தையின் பிறப்பைவிட ஒரு பெண் குழந்தையின் பிறப்பு பொதுவாக சிறப்பற்றதாகக் கருதப்படுகிறது'' என்று குறிப்பிட்டுள்ளார்.

குழந்தைகளுக்காகப் பாடப்படும் தாலாட்டுப் பாடல்களில் ஆண் குழந்தையின் பிறப்பையும், சிறபபையும் பாடப்பட்டிருப்பதையே அதிகம் காணலாம்.

''ஆண் குழந்தை 1000 தாலாட்டுக்களில் புகழ்ந்து பேசப்படுகிறது. அவன் எதிர் கால வெற்றி முன்கூட்டியே கற்பனை செய்துகொள்ளப் படுகின்றன. ஆனால் பெண் குழந்தையாக இருந்தாலோ தாலாட்டு ஊமையாகி விடுகிறது'' என்று நாட்டுப் புறப் பாடல்களை ஆராய்ந்த ஒரு அறிஞர் கூறுகிறார்.

இது தமிழகத்தில் மட்டுமல்ல; இந்தியாவில், இன்னும் பல நாடுகளில் சமுதாயத்தில் பெண்கள் எத்தகு இழி நிலையில் இருக்கிறார்கள் என்பதைக் காட்டுவதாகவே இருக்கிறது.

## வீட்டில்பெண்கள்

கல்விக்கு தெய்வம் சரஸ்வதி என்றும், செல்வத்திற்கு தெய்வம் லஷ்மி என்றும்,வீரத்திற்கு தெய்வம் மலை மகள் என்றும் பெண்களை வணங்குகின்றனர்கள்.

ஆனல்பெண்களுக்குகல்விஎதற்குசொத்து எதற்கென்று கேட்கிறார்கள்; அவற்றை வழங்க மறுக்கிறார்கள் பெண்களுக்கு எதற்கு வீரம், விளையாட்டு உடல் பலம் என்று அடித்துக் கேட்கிறார்கள்.

அரசு சட்டம் 15 ம் பிரிவு பெண்களுக்கு சம உரிமை வழங்குகிறது; ஆனால் இந்த உரிமைகள் மறுக்கப்பட்டே வருகிறது.

கிராமத்திலும் சரி நகரத்திலும் சரி, வீட்டில் இருந்தாலும் சரி. வேலைக்கும் போய் சம்பாதித்துக் கொண்டு வந்தாலும் சரி பெண்கள் தாழ்ந்தவர்களாகவே கருதப் படுகிறார்கள்.

பெண்கள் அடுப்பூதத்தானே என்று அவர்களுக்கு கல்வி அறிவூட்டுவதில்லை; சிறு வயது முதலே அவர்கள் குடும்பத்தைப் பராமரிக்கப் பழக்கப் படுத்தப் படுகிறார்கள்; வெளியுலக அறிவைப் பெற்றுக் கொள்ள விடுவதில்லை; அதை பற்றி கவலை படுவதில்லை.

பெண் திருமணமாகி இன்னொரு வீட்டுக் பொகிறவள் தானே என்று அவர்களுக்கு சொத்து உரிமை வழங்குவதில்லை; திருமணமாகி தன் விட்டுக்கு வருகிற பெண்களை கூட பொருளோடு (வரதட்சணையோடு) வரவேண்டுமென்கிற நிலை தான்.

பெண் பிறப்பதே குடும்பத்திற்கு சுமை என கருதப்படுகிறது அவர்க » செலவினமாக கருதப்படுவதால் அவர்களது உணவு, உடை, கல்வி, மருத்துவ வசதி, பராமரிப்பு இவைகளில் அதிகமாக கவனம் செலுத்தப்படுவதில்லை.

அதுமட்டுமல்ல; பெண்கள் மென்மையானவர்களாக, பலவீனமானவர்களாக, ஆண்களின் ஆதரவில் வாழ்கிறவர்களாகவே கருதப் படுவதோடு அவர்களுக்கு கற்பு, ஒழுக்கமுடன் இருக்க வேண்டியவர் என்ற எண்ணத்தோடு அவர்கள் ஒதுக்கி வைக்கப் படுகிறார்கள்;

பெண்கள் அதிர்ந்து பேசக் கூடாது; சிரிக்கக் கூடாது; நடக்கக் கூடாது' விளையாடக் கூடாது, அம்பலத்தில் நடமாடக் கூடாது — ஆண்களுடன் கூடக் கூடாது பேசக் கூடாது அந்தரங்கத்திலேயே இருக்க வேண்டும் என்று ஒடிக்கி அடக்கி வைக்கப் படுகிறார்கள்.

பெண்கள் அழகானவர்கள் கவர்ச்சியானவர்கள் ஆண்களின் இன்பத்திற்காக மட்டுமே படைக்கப் பட்ட போகப் பொருளாகவே கருதப் படுவதோடு பிள்ளைகளை பெறும் யந்திரமாகவுமே கவனிக்கப்படுகிறார்கள்.

பெண்களுக்கு குடும்பத்திலுள்ள நிலைமை இது வென்றால், வீட்டிற்கு வெளியே சமுதாயத்தில் அவர்கள் நிலை ... ?

(அடுத்த இதழில் முடியும்)

## தனிமை

○

ஒரு புயல்
நரைத்துப்போயிற்று
ஒரு நதியும்
நரைத்துப்போயிற்று

சில
இளம் புயல்கள்
புல் நுனியில்
இடறி விழும்;
சிலதுகள்
திசைமாறிச்சிதறிப்போகும்

அந்த ஞானியின் தலையில்
இன்னும்
தேசத்தை தேடும்
மேதைகள்
தத்துவக்காட்டுக்குள்
தம் தேசத்தை
தொலைத்துப்போயினர்

என்
தேசமும் இப்போது
நரைத்துப் போயிற்று

நான் தனிமையில்
உன்னால்
இனி
என்னை உடைக்க முடியாது

— வண்ணச்சிறகு

# தாயகம் திரும்பிய இளைஞர் சொந்த சமூகத்திற்காக பாடுபடவேண்டும்

தாயகம் திரும்பிய பின்னர் நமக்கு ஏற்பட்டிருக்கும் வாழ்க்கை புதியதாக அமையலாம். அறிமுகமில்லாத புதிய நாட்டில் ஏற்பட்டுள்ள புதிய வாழ்க்கைமுறை நாம் உடனடியாக ஜீரணம் செய்ய முடியாதது. இருப்பினும் நாம் வாழ்ந்தாக வேண்டும்-பெற்ற மறுவாழ்வைக் கொண்டுதான் நிரந்தரமான வாழ்வுக்கு வழி வகுத்தாக வேண்டும்.

கிடைத்துள்ள வாழ்க்கையில் என்ன திருப்தி? இதற்கு காலங்கள் உருண்டோடலாம். காரணம், நாம் வாழ்ந்த வாழ்க்கை, ஒதுக்கிவைக்கப் பட்ட ஒரு சமுதாய அமைப்பு, தொழிற் சங்கங்களையே உடல், பொருள், ஆவியென நம்பி வாழ்ந்த அந்தச் சமுதாயச் சூழ்நிலை இவற்றையெல்லாம் மாற்றி அமைத்து புதியதொரு வழியில். எமது வாழ்க்கை ஓட்டத்தினை அமைத்துக்கொள்ள வேண்டிய நிலைக்கு வந்திருக்கிறோம். அவ் வாழ்க்கையின் திருப்திக்கு எத்தனை காலங்கள் எடுக்குமோ தெரியாது.

இருப்பினும், அந்த நாட்டில் இளைஞர்கள் மத்தியிலே ஏற்பட்ட ஒரு மறுமலர்ச்சி அவர்கள் அயராது உழைத்த உழைப்பு, சிந்தனை சிற்பிகளாக அவர்கள் மாறி சமுதாய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திய ஒரு தன்மை, இன்று இந்த நாட்டில் வந்தபின்னர் ஓய்ந்துவிட்டதே. இந்த நாட்டிலும் நாம் இன்னும் 'தாயகம் திரும்பியோர்—அகதிகள்' என்று ஓர் வட்டத்திற்குட் பட்ட சமுதாயமாகத்தான் இருக்கிறோம்-

அங்கு உரிமை முழக்கம் செய்தபோது செவிடன் காதில் ஊதிய சங்காக இருந்தது. இந்த நிலைக்குக் காரணம் நம்மவர்களை வழிநடத்திச் சென்ற தொழிற் சங்கங்கள் தான் என்றால் மிகையாகாது.

எனவேதான் நமது வாழ்வை வளமாக்க பொங்கி எழுந்தார்கள் இளைஞர்கள். இளைஞர் அணி நம் இனத்தவர்களை வழிநடத்திச் செல்ல முயன்றபோது தொழிற்சங்கங்கள் விழித்துக் கொண்டன. என்றாலும், நம் இனத்தவர்களின் இரத்தத்தில் ஊறிப் போன அடிமைத்தனம், தொழிற் சங்கங்களையே அண்டிப் பிழைத்த தன்மையை மாற்றிக் கொள்வதில் நம் மினம்முன்வரவில்லை. இளை அயராத பணி அவர்களின் இலக்குகளை அடைய இயலவில்லை.

அந்த நாட்டில் எத்துணை உரிமையோடு, நம் இனத்தைக் காக்கவும், அவர்களுக்கு அவர்களின் அடிமைத் தன்

**தனகோபால்**

மையை எடுத்துரைக்கவும் ஆக்கப்பணிகளை மேற்கொண்டனரோ அந்தப் பணி இங்கும் தொடரட்டுமே.

அண்டிப் பிழைத்த இனத்தின், புதிய வாழ்க்கையிலும் அது தொற்று நோயாக பரவி விடக்கூடாது. எனவேதான் ஆங்காங்கே நமது இனம் 'தாயகம் திரும்பியோர்—அகதிகள்' பட்டியலில் இடம் பெற்று கூட்டம் கூட்டமாக வாழும் இடங்களில், ஒருங்கிணைப்பு— அமைப்புகள் தோன்றட்டும். தமது சேவையைத் தொடர்ந்து செய்யட்டும்.

நம்மவர்கள் இலங்கையில் வாழ்ந்த போது, தமக்கென எதையும் செய்யத் தெரியாதவர்களாக வாழ்ந்தார்கள்.

(8ம் பக்கம் பார்க்க)

# எனது 'மறு வாழ்வு' அனுபவகள்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

நான் லாரியை விட்டு இறங்கினேன்; எதிரே ஒரு கல்யாண மண்டபம்' கல்யாணக்களை கட்டியிருந்தது.

பசி வயிற்றைக் கிள்ளியது. என் துணிச்சலோ உள்ளே சென்றேனோ எனக்கே தெரியாது. திருப்தியான ,சாப்பாடு கன்னட மொழியே தெரியாத நான் அந்த கன்னடகல்யாண மண்டபத்திற்குள் அழையாத விருந்தாளியாக நுழைந்து சாப்பிட்டு வந்ததை இப்பவும் நினைத்துப் பார்த்தால் எனக்கு மலைப்பாகவே இருந்தது.

அங்கிருந்துபுறப்பட்டு சிறிது தூரம் நடந்தேன்.

சின்னஞ்சிறு நகரம், அது தான் ''மாண்டியா'' என்ற ஊர்.

இங்காவது எனக்கு வேலை கிடைக்குமா?

இந்த சிந்தனையோ நான் நடந்தபோது ஒரு வயதான பெண்மணியை பார்த்தேன. பேச்சு கொடுத்தேன்.

நான் எதிர்பார்க்கவில்லை அந்த அம்மாள் ஒரு தமிழ் பெண். தமிழ்நாட்டுக்காரர்கள்.

அவரிடம் எனது நிலைமை சொன்னேன். அவர்கள் என்னை ஒரு சவுக்காரிடம் (முதலாளியிடம்) அழைத்துச் சென்று விட்டார்.

அவர் எனக்கு வேலை கொடுத்தார். ஒரு மாதம் இருந்தேன். அவர் அப்பகுதியிலேயே ஒரு பெரிய மனிதர் என்று தெரிந்துகொண்டு அவரிடம் ஆங்கிலத்தில் ஒரு மனு எழுதிக் கொடுத்தேன், ஏதேனும் தொழிற்சாலையில் வேலை ஒன்று பிடித்துக் கொடுங்கள் என்று.

''இந்த வேலை கொடுத்ததே பெரிது. படிச்சவர்களுக்கெல்லாம் என்னிடம் வேலை இல்லை'' என்று கூறி ருபாய் நாற்பது கொடுத்து அனுப்பி விட்டார்.

பாண்டியத்தை காட்டிய தில் வந்த வினை என்று நொந்து கொண்டேன்.

மாண்டியாவிலிருந்து மைசூர் வந்தேன். இனி மைசூரில் வேலைத் தேட கூடாது. நீலகிரிக்கே செல்வோம் என்று முடிவு கட்டினேன்.

அங்கு ஊட்டிக்கு செல்லும் சேரன் பேருந்தியை பார்த்ததும் எனக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. ஏறி அமர்ந்தேன்.

அப்போது நீலகிரியிலிருந்த எனது பெற்றோரை சென்றடைந்தேன். பிறகு நோய்வாய்ப் பட்டுத் தேறினேன். மீண்டும் வேலை தேடும் படலம்.

குன்னூரிலுள்ள பழப்பண்ணையில் ரூபாய் நான்கு கூலிக்கு வேலைக்குச் சேர்ந்தேன். மூன்று வருடங்கள் ஓடியது. இந்த வேலையில் தாயகம் திரும்பிய சிலர் எனக்கு நண்பர்கள் ஆனார்கள். அவர்கள் மூலம் திருச்சியில் இருந்த எனது வேலை வாய்ப்பு பதிவை ஊட்டிக்கு மாற்றினேன்.

உதகை வேலை வாய்ப்பகத்தின் மூலம் பல நேர்முக தேர்வுகள் வந்தும் நான் வெற்றிபெற முடியாமல் தோல்வியுற்றேன்,

அந்த வேளையில்தான், அப்போது அங்கு தோட்டக்கலை இயக்குனராக இருந்தவர் கூறிய அறிவுரைகள் வழிமுறைகள் கொடுத்துதவிய சான்றிதழ்கள் எனக்கு உதவிகரமாக இருந்து, குன்னூர் வட்டாப்சி அலுவலகத்திற்கு தற்காலிக இளநிலை உதவியாளராக தேர்ந்தெடுக்கப்பட்டேன். அது தற்காலிக பணியாததால், தேர்வாணையின் மூலம் தெரிவு செய்யப்பட்டோர் வரவே நான் பதவி நீக்கம் செய்யப்பட்டேன்.

பின்னர் எட்டு மாதங்களுக்குப்பின்னர் மீண்டும் வேலை வாய்ப்பகத்தின் மூலம் குன்னூர் நகராட்சி அலுவகத்தில் தற்காலிக இளநிலை உதவியாளராக வேலைகிடைத்தது. இங்கு வேலை செய்துக் கொண்டிருந்த போதே,தேர்வாணைக்குழுவுக்கு விண்ணப்பம் அனுப்பினேன். 28.10.81 நடந்த தேர்வில் வெற்றி பெற்று, ஜூன்82 யில் உதகை சிங்கோனாதுறை இயக்குனர் அலுவகத்தில் பணியில் அமர்த்தப் பட்டேன்.

தொடர்ந்து இங்குதான் பணி செய்து வருகிறேன்.

இவற்றை எல்லாம் நினைத்துப் பார்க்கும்போது எனக்கு உள்ளம் புல்லரிக்கிறது.

வயிற்றை கழுவ ஒருபிழைப்பு —வாழ்க்கையை நடத்த ஒரு வழிஎன்று மறுவாழ்வு அமைத்துக் கொள்ள நான் பட்டபாடு பெற்ற அனுபவங்கள் எத்தனையோ?

நான் மட்டுமா? பிறந்து வளர்ந்து வாழ்ந்த ஒரு நாட்டினை விட்டு வந்து பார்த்து வாழ்ந்திராத இந் நாட்டிற்கு வந்த தாயகம் திரும்பியோர் ஒவ்வொருவருமே தமது மறு வாழ்வை அமைத்துக்கொள்ள பெற்ற அனுபவங்கள்... ✳

---

(7ம் பக்கத் தொடர்ச்சி)

எதை எடுத்தாலும் தொழிற் சங்கங்கள் தான் என்ற நினைப்பு. வீட்டில் குடும்ப தகறாறு ஏற்பட்டால் கூட, தாமே அத்தகராறை தீர்த்துத் கொள்ளத் தெரியாதவர்கள், தொழிற்சங்க அலுவலகளுக்கு சென்று தீர்த்துக் கொண்டார்கள். அந்த அளவிற்கு தொழிற் சங்கங்களை அவர்கள் நம்பி வாழ்ந்தார்கள். ஆனல் அப்படி நம்பியவர்களுக்கு கிடைத்த பலன் பூஜ்யம் தான்.

அரசு அலுவலகங்களுக்கு நேரடியாகச் சென்று ஒரு வின்னப்பம் கொடுத்து தமக்கு வேண்டிய வற்றைப் பெற்றுக் கொள்ள அவர்கள் பழகவில்லை எல்லாமே தொழிற் சங்கங்க்ள் என்று அண்டி வாழ்ந்ததால் ஏற்பட்ட விளைவு அது. ஆனல் இன்று அவர்கள் இந்த நாட்டில் தமக்கு தேவையான வற்றை மீட்க, பெற்றுக் கொள்ள அரசு அலுவலகங்களுக்கு நேடியாகச் செல்ல வேண்டிய ஒரு நிலையில் தள்ளப்பட்டிருக்கிருர்கள் அனுபவம் அற்றவர்கள் இவ்வறியாமை நிலையைப் பயன்படுத் சில இடைத் தரகர்கள் அவர்ளை ஏமாற்றி பணம் பறிக்கும் ஒரு நிலையை இன்று காணக்கூடியதாகஇருக்கிறது, தாயகம் திரும்பியோர் சிலர் தமக்கு வீட்டுக் கடன் பெறுவதற்காக இடைத்தரகர்களிடம் தமது கடவுக் சீட்டு குடும்ப அட்டை முதலியவற்றைக்கொடுத்துவிட்டுஏமாந்து போய் இன்று தெருத் தெருவாக அலையக்கூடிய நிலையைக் காண்கிறோம். இடைத் தரகர்கள் அக்கடவுச் சீட்டுகளையும் குடும்ப அட்டைகளையும் கொண்டு கடன் பெற்று தாமே சுகம் அனுபவித்து வருகிறார்கள்.

இதுபோன்று இன்னும் எத்தனையோ ஏமாற்றங்கள். இந்த நிலையை மேலும் தொடரவிடவேண்டாம். தாயகம் திரும்பிய இளைஞர்கள் தமது பணியைத் தொடரட்டும். அமைப்புகள் ஆங்காங்கு தோன்றட்டும். நமது இனத்தினருக்கு சேவை பெருகட்டும். இடைத் தரகர்களின் நடவடிக்கைகளை முறியடிக்கட்டும்.

நம்மவர்களுக்கு தேவையானவற்றை மன்றங்கள் மூலமாக செய்து கொடுப்போம். □

# அங்கு புயலும் வெள்ளமும்

சமீபத்தில் வங்கக் கடலில் புயல் தோன்றி தமிழ் நாடு, ஆந்திரா பகுதிகளில் பெரும் காற்றும், மழையும் உருவானது. இதனால் ஏற்பட்ட பெரு வெள்ளத்தில் லட்சக்கணக்கான மக்கள்பாதிக் கப்பட்டார்கள்; பலர் வீடுகளை இழந்தார்கள்.

இன்றைக்கு புயல் தோன்றினால் தமிழகத்தில் மழையே பொழியும் என்ற நிலையில் இயற்கை விளையாடுகிறது. அடிக்கடி புயல் தோன்றக் காரணம் என்ன. அதுவும் வங்கக்கடலில்மையம் கொள்கிறது இதை தடுக்க முடியாதா?

## புயலும்மழையும்

நமது நாட்டில் மிக வெப்பமான பருவ நிலை இருப்பது தான் இதற்கு காரணம். வெப்பநிலை மாறுதல்களினால் குறைந்த காற்று அழுத்த மண்டலம் உருவாகிறது. காற்று அழுத்த மண்டலம் சுழல் அழுத்த மண்டலமாக உருவாபோது அதுபுயல்' எனப்படுகிறது. வெறும் அழுத்த மண்டலம் பெருமழையையும்,புயல் காற்றுடன் கூடிய மழையையும் தோற்விக்கும்

இந்தியாவின் அரேபியக் கடல் மற்றும் வங்கக் கடல்களின் அடிபரப்பு இந்த அழுத்த மண்டலங்கள் உருவாக துணையசக நிற்கின்றன. காரணம் நம் நாட்டின் மிகவும் வெப்பமான நிலையும் அதற்குகாரணம்.

இந்தியாவைத் தவிர சீனா மற்றும் கரீபியன் தீவுகள் பகுதிகளின் புயல் உருவாக வாய்புகள் அதிகம். சீனாவில் உண்டாகும் புயலுக்கு 'டைபூன்' என்று. பெயர்.

அட்லாண்டிக் மற்றும் பசிபிக் கடல்களில் ஓடும் நீரோட்டகளில் ஐரோப்பியா, வட அமெரிக்க நாட்டுப் பகுதிகளில் புயல் தோன்றும் வாய்ப்புகள் குறைவு - மூன்றாம் உலகநாடுகளை இயற்கையும் சதி செய்கிறது போலும்.

## பூகம்பம்

இங்கே புயலும் மழையும் என்றால் மேற்கே பூகம்பம், எரிமலை அபாயங்கள்.

பூமியின் பரப்புக்கடியில் உள்ள அதிக திண்மமரக்கப் பட்ட திரவங்கள் (Solidifieal Liquid) அசைவதால் பூகம்பங்கள் உண்டாகின்றன. வருடம் சுமார் 500000பூகம்பங்கள் ஏற்படுகிற தென்றால் பாருங்களேன். ஆனால் சில பூகம்பங்கள் மட்டுமே மிக கடுமையாக ... அதிக அபாயத்தையும்,சேதங்களையும் உண்டாக்கவல்லன எரிமலை பகுதிகளில் பூகம்பம் ஏற்பட வாய்ப் அதிகம். இதை செஸ்மியோ கிராப் என்னும் கருவியின் மூலம் அளக்கலாம். இதனால் பக்கத்தில் உள்ள கடல்களில் சுனாமி என்னும் மிக பெரிய

# அங்கோ பூகம்பமும் எரிமலையும்

அலைகள் உண்டாகும். பசிபிக் பெருங்கடலில் 85 மீட்டர் உயர்த்திற்கு அலை எழும்பியது. உலக வரலாற்றில் மிக பெரிய பூகம்பம் 1556- ல் சீனாவில் ஏற்பட்ட போது. 8,30,000 பேர் உயிர் இழந்தனர்.

கடந்த செப்டம்பர் மாதத்தில் மெக்ஸிக்கோ நாட்டில் ஏற்பட்ட பூகம்பத்தில் சுமார் 1 லட்சம் பேர் உயிர் இழந்திருக்கிறார்கள். அந்த பூகம்கத்திற்கு பிறகு அந்த பகுதியில் நில சரிவுகளும், அவலாஞ்சி எனப்படும் நிலப்பெரும் சரிவுகளும் ஏற்படுகின்றன.

## எரிமலைகள்

பூமியின் நடுவில் மிக அதிக வெப்ப நிலையில் உருகிய பாறைகள் உள்ளன. இவை கற்பனை செய்ய இயலாத இவ்வகை எரிமலை தான்.

அழுத்தத்தில் (Pressure) உள்ளன. இந்த உருகியப் பாறைகளுக்கு 'மாக்மா' (Maqma)என்று பெயர். பூமியின்மேற் பரப்பில் சிறுவெடிப் போ, தூவரமோ ஏற்பட்டால் இந்த பாறை குழம்புகள் அதிக வெப்ப நிலை கொண்டது பூமியின் பரப்பிற்கு பீறிட்டுக் கிளம்பும் போது சுற்றியுள்ள பல சதுர கிலோ மீட்டர் பரப்பை மூடிவிடக் கூடியது. லாவா குளிர்ந்து போரகும். சில சமயங்களில் மிக அதிக பரப்பில் லாவா பரவும் போது பெரிய பீடபூமிகள் கூட உண்டாகும்.

மூன்று வகை எரிமலைகள் உண்டு-

1. அமிழ்ந்த எரிமலைகள் (Extinct Volcano)முன்னொரு காலத்தில் சிதறியது. முழுவதும் அணைந்துஇனி வெடிக்க வாய்ப்பில்லாதது.

2.மயக்கஎரிமலை (DorMant Volcano) வெகு காலத்துக்கு முன் சிதறியது. மீண்டும் சிதற வாய் புண்டு. (சமீபத்தில்) கொலம்பியாவில் வெடித்தது

3. துடிப்பு எரிமலை (Active Volcano) இவ்வகை எரிமலைகள் சிறிய அளவில் புகையும். நெருப்புகள் வந்ததுக் கொண்டிருக்கும். எந்த நேரத்திலும் வெடிக்கும் அபாயம் உண்டு.

உலக வரலாற்றில் மிகப் பெரிய எரிமலை, 1883 ல் இந்தோனேஷியாவில் நரகோட்டா என்னுமிடத்தில் வெடித்து சிதறியது. 50 கிலோ மீட்டர் உயரத்துக்கும், 400 கிலோ மீட்டர்சுற்றனவுக்கும் கொதிக்கும் பாறை குழம்பை பீச்சியடித்துள்ளது. இதில் 40,000 பேர் உயிர் இழந்தார்கள். எரிமலை உள்ள இடத்தில் பூகம்பம் ஏஙபட வாய்ப்பு அதிகம். இவைகளில் அதிகம் பாதிப்பது ஜப்பான் தான்.

சமீபத்தில் மேற்கு கொம்பிளவில் 'ஞவடோ டெல் ரூயின் என்ற எரிமலை வெடித்துத் தான் 25,000பேர் பலியானர்கள்.

—ஜான்பிரிட்டோ

# எதுவுமில்லாத ஒரு தலைவர்



தான்சானியா என்ற நாடு கிழக்கு ஆப்பிரிக்காவில் உள்ளது. 1961ல் இது சுதந்திரம் அடைந்தது.சுதந்திரம் அடைந்தகாலம் முதல் அக்டோபர், 1985 வரை அதன் ஜனாதிபதியாக ஆட்சி புரிந்தார். ஜுலியஸ் நைரேரே இவருக்குதற்போது 63வருடங்கள் ஆகிறது. மிகச்சிறந்த கல்வியாளர். இவருக்கென்று சொந்தமாக நிலம் கிடையாது,சொந்தமாக எந்த தொழிலையும் செய்யவில்லை, அதிகபட்சமாக சொல்வதென்றால் சொந்தமாக ஒருகார்கூட வைத்திருக்கவில்லை.

உலக வரலாற்றிலேயே மிகவும் மதிப்புமிக்க தலைவர்களில் ஒருவராக கருதப்படுகின்றார். ''கல்வி என்பது மனிதனை சுதந்திர மானவனாக மாற்ற வேண்டும்'' அதாவது அனைத்திலிருந்தும் பூரண விடுதலையை கொடுக்கவேண்டும் என்ற நைரேரே வரையறையே மிகச்சிறந்ததாகும். நாட்டு மக்களின் முன்னேற்றத்திலே தன் வாழ்நாள் முழுவதையும் செலவிட்ட அந்த தலைவனுக்கு அம் மக்கள் பொருள்களையும், பணத்தையும் அளவில்லாமல் அன்பளிப்பாக அனுப்பினர். அதனை சேகரித்து வைக்ககூட தன்னிடம் இடம் இல்லை ஆகவே அனுப்பவேண்டாம் என அம் மக்களை கேட்டுக்கொண்டார். இப்படியும் தலைவர்கள் இருகின்றார்கள் என்பது தமிழ மக்களுக்கு புதுமையாக இருகும்.

# சுயமாக தொழில் செய்யலாம்

## ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டம்

### சிறு தொழில்கள் செய்ய கடன்-மானியம்

ஒருங்கிணைந்த ஊரக வளச்சித்திட்டம் (Idrp-Intergrated (Rural Development Programme) ஒன்றை அரசு ஏற்படுத்தியுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் கிராமப்புறங்களில், கிராமபுறத்திற்கேயுரிய தொழில்களை செய்யலாம்.

பால்மாடு, ஆடு, பன்றி, வளர்தல் கோழிப்பண்ணை வைத்தல், தையல்கடை வைத்தல், விவசாயத்திற்கு பம்பு செட் போன்றவை அமைத்துக் கொள்ளல், பட்டரை தொழில் ஆரம்பித்தல், டீக்கடை, காய்கறிகடை, பலசரக்கு கடை, மற்றும் பெட்டிகடைகள் ஆரம்பித்தல், சிறு (சுமைதூக்கி) வியாபாரம் செய்தல், சலவை, மற்றும் முடித்திருத்தல் போன்றகடைகள் திறத்தல் இப்படி இன்னும் செய்யக் கூடிய சிறு தொழில்களை இத்திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கலாம்.

இவற்றை ஆாம்பிக்க ரூபாய் 3000 கடனாக வழங்கப்படுகிறது. இதன் ஒரு பகுதி மானியமார்கதள்ளப்படிசெய்யப்படும் ஆதிதிராவிடர்களாயின் அவர்களுக்கு 50சதவிகிதம் இதில் மார்னியமாக்கப்படும்; பிற்படுத்தப்பட்டவர்களாளின் மூன்றுள் ஒன்று மானியமாக்கப்படும். பட்டுப்பூச்சி வளர்ப்பது போன்ற தொழில்களுக்கு குறிபிட்ட சலுகைகள் வழங்கப்படுகிறது. வழங்கப்படும் கடனின் 50 சதவிகிதம் மானியம் வழங்கப்படுவதோடு, ஆறுமாத பயிற்சியும், பயிற்சி காலத்தில், மாதமொன்றுக்கு ரூபாய் 150 வும் பயிற்சிக்காலப் பணமாக வழங்கபடுகிறது.



இந்த கடனை பெறுவதற்கு விண்ணப்பம் செய்ய உரிய பாரத்தை ஊராட்சி ஒன்றியத்தில் பெற்றுக் கொள்ளலாம். உரிய முறையில் அதைபூர்த்தி செய்து கிராம அலுவலர் மற்றும் கிராம சேவகர் ஆகியோரிடம் சிபார்சு பெற்று அனுப்ப வேண்டும்.

மாவட்ட ஊரக வளர்ச்சி அலுவலரின் (D. R. D. A- district Rural Development Agency) இத்திட்டத்தை செயல்படுத்துகிறார். கோட்ட வளர்ச்சிஅலுவலர்; (Divisional Development Officer) மாவட்ட ஆட்சியாளரே இந்த பணிக்குரியவர்களாவர்.

மேற்படி அலுவலர்கள் இதன் பேரில் பரித்துரை செய்வர். கடன் வழங்கு முன் ஒரு மஞ்சள்நிற அட்டைவழங்கப்படும். இதைக்கொண்டு கடன் பெற்று, உரிய சிறுதொழில்களை ஆரம்பிக்கலாம். □

(3ம் பக்கத் தொடர்ச்சி)

புக்கள் தோன்றின (இந்த அமைப்புகள் இந்திய அரசிற்கோ எதிரானதல்ல, என்பதை அனைவரும் உணர்வது அவசியம்.) இந்த அமைபபுக்கள் சில நேரஙகளில் அரசு அதிகாரிகள் போலீசாரால பல எதிர்ப்புக்களைச் சந்தித்தது.

ஆனல் அகதிகளின் நலன் கருதி அகதிகளை ஒன்றிணைக்கவும், அகதிகளின பிரச்சினைகளைத் தீர்க்கவும்இந்த அமைப்புகள் அவசியமான ஒன்ருகும், அகதிகள் மத்தியில் ஏற்படும் இந்த அமைபபுகள் அகதிகள் இலங்கையில் வர்ழ்ந்த நிலையையும், தற்போது இந்தியா அரசு தஞ்சம் கொடுத்துள்ளதையும், இந்திய அரசுக்கு அகதிகள் எவ்வாறு கடமைப்பட்டவர்கள் என்பதை இந்த அகதிகள் மத்தியில் தெளிவாக விளக்குவதோடு, இங்கு குடியேற விரும்பும் (வம்சாவழி) அகதிகளின் பிரச்சனையை எவ்வாறு அணுக வேண்டும், ஈழத்தில் மீண்டும் புத்துயிர் பெற்று வாழப்போகிறவர்கள் அங்கு எப்படி வாழ வேண்டும், அதற்காக தங்களை தயார் செய்து கொள்ள ஓர் நல்ல சந்தர்ப்பம் இப்போது கிடைத்திருக்கிறது. இதுபோன்ற நல்ல சந்தாப்பங்களை சிற்சில பிரச்சினைகளின் நிமித்தம் துர்ப்பிரயோகம் பண்ணலாபா என்ற தெளிவு படுத்தி சில நல்ல அரசியல் தெளிவுகளையும் ஒற்றுமையையும் வளர்க்க உதவுகிறது.

இலங்கையில் தற்போது காடுகளில் முகாம்களிலும் வாழும் அகதிகள் நிலைபற் (broken type)ன்ஞல் இந்தியா சென்ற அகதிகள் இந்திய மக்கள் மத்தியில் எடுத்துக் கூறி அவர்கள் உயிரையும் காக்க ஏற்பாடு செய்ய கூடும். என்று எண்ணிக் கொண்டிருக்கின்ருர்கள், என்பதும், இந்திய வானொலியும், பத்திரிகையிம் இலங்கை அகதிகளுக்கு வீடுகள் கட்டப்பட்டன, பல உதவிகள் செய்யப்பட்டன என்ற தகவல்களையும் கேட்டதும் நமது வாழ்க்கையையும் சிறிது காலம் இந்தியாவில் கழித்து வரலாம் என்ற எண்ணமும் உருவாகிறது. இப்படி சிலர் அகதிகளாக வந்த பின்னர் இங்கு அதிகாரிகளின் கெடுபிடிகளைக்கண்டு செத்தாலும் பரவாயில்லை என்று மீண்டும் இலங்கைக்கே திருபபி சென்றதாகவும் உண்டு:

இப்படியான சூழ்நிலையில் அகதிகளின் அறியாமையை நிவர்த்தி செய்யும் முகமாகவும் புதிதாக வரும் அகதிகளை ஆதரிக்கும் முகமாகவும இந்த அமைப்புகள் செயல்பட்டுக் கொண்டுகின்றன. முகாம்களில்ஏற்படும் மரணஙகளுக்கு இந்த அமைப்புக்கள் முன்னின்று செய்யப்படுகின்றன. அலுவலக நேரம் தவிர்ந்த ஏனைய நேரஙகளில் கடுமையான நோயிஞல் அவதிப்படுவோரை மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்வது, அகதிகள் மத்தியில் ஏற்படும் அனைத்து பிரச்சினைகளையும்தவிர்ப்பது போன்ற செயல்களில் ஈடுபட்டிருப்பதும் அகதிகளின்பற்ருக்குறைகளை அரசு அதிகாரிகளிடம் கேட்பதுமாக இவர்களின் செய்வார்கள் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

அண்மையில் 5-9-85 ந் தேதி நாகபட்டினம் கரை வந்து திருச்சி முகாமிற்கு அனுப்பபட்டுபதிவு கொடுக்க மறுக்ககப்பட்ட போது மேலிடத்து அனுமதி வரும்வரை இந்தஅகதிகளை (72பேர்கள்) உண்வு இருப்பிடம் கொடுத்து பராமரித்தது கொட்டப்பட்ட முகாமில் உள்ள இலங்கை அகதிகள் நலன்புரி அமைப்பு என்பது குறிப்பிடத் தக்கது.

(11-ம்பக்கம் பார்க்க)

10ம் பக்கம் தொடர்ச்சி

தவிர இந்த அமைப்பு பல சேவைகளை அகதிகள் மத்தியில் செய்து கொண்டு வருகின்றன. 24-9-85ந் தேதி தமிழக பந்தை முன்னிட்டு இந்த அமைப்பு எந்தக் கட்சியையும் சாராமல் முழுமனதுடன் ஈழத் தமிழருக்காக மழையில் நனைந்தபடி சுமார் 2000 பேர் உண்ணாவிரதம் இருந்ததும் இந்த உண்ணாவிரதத்தை முடித்து வைக்க அமைச்சர் திரு. திருநாவுக்கரசு கலந்து கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

5-2-85ந் தேதி முதல் படகு மூலம் தமிழகம் வந்த 5-குடும்பங்கள் அடங்கிய 21 நபர்களை மேலிடத்து உத்தரவு வரும்வரை ஆதரவு கொடுத்தது மட்டுமல்லாமல் அடுத்து வந்து கொண்டிருந்தவர்களுக்கும் பதிவு கிடைத்ததும் உணவு ஏற்பாடு, தங்கும் வசதி, மின்சார வசதிகள் (அரசு கவனத்திற்குவருமுன்) ஆகியவற்றை மண்டபம் முகாமில் இருந்த இலங்கை அகதிகள் ஒருமைப் பாட்டுக்குழு கவனித்து வந்தது. தவிர அகதிகளுக்காக பல சேவைகளையும் தம்பகுதிகளில் சிரமதான ஏற்பாடுகளையும் இந்த அமைப்புகள் மேற்கொண்டது மட்டுமல்லாமல் இலங்கை இனப்படு கொலைகளை கண்டிக்கும் முகமாக அகதிகளை ஒன்றினைத்துக் குரல் கொடுக்கும் பணிகளிலும் ஈடுபட்டுள்ளது. தவிர இந்த அமைப்புகள் தாயகம் திரும்பியோரையும் இலங்கையில் இருந்து வந்த தங்கள் இன பந்துக்கள் என்றெண்ணி பல உதவிகளைச் செய்து வந்துள்ளது.

சமூக சேவை நிறுவனங்கள் பல இருந்த போதிலும் அகதிகள் பிரச்சினைகளை சரியாக அணுகி அவர்களை ஒரு நிலைப் படுத்துவதில் இந்த அமைப்புக்களின் சேவை தனிச் சிறந்தது, என்பதும் இது போன்ற அமைப்புக்கள் உருவாவதால் இந்த அகதிகள் திரும்பி இலங்கைக்குச் செல்லும் போதுங்கூட இலங்கையிலும் தங்கள் பணிகளை திறம்படச் செய்ய வாய்ப்புகள் உண்டு.

சமூக சேவை நிறுவனங்களில் சில அமைப்புக்கள் பற்றிய தவறான கருத்துக்களை அரசுக்கும், அரசு அதிகாரிகளுக்கும் கொடுப்பதால் அகதிகள் அமைப்புகள் திட்டமிட்டு அரசு அதிகாரிகளால் ஒழிவாங்கப் பட்டிருக்கின்றன. அகதிகளின் (இலங்கைத்தமிழர்) நல்வாழ்விற்காக வழிவகுக்க ஏற்பாடுகளும், ஆதரவு கொடுத்துக் கொண்டிருக்கும் மத்திய மாநில அரசுகளும், அரசியல் தலைவர்கள், மக்கள் அனைவரும் இதுபோன்ற அமைப்புக்களின் செயல் பாடுகளை ஆராய்ந்து இதற்கான அனுமதி பெறவும் ஆதரவு கொடுக்கும் படியும் இந்த அமைப்புக்களும் அகதிகளும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கைப் பிரச்சினையில் கவனம் செலுத்திக் கொண்டிருக்கும் அனைவரும் விடுதலைப் போராளிகளை இந்திய அரசு அங்கீகரிக்க வேண்டும் என்றும் அகதிகளுக்கு ஐக்கிய நாட்டுச் சபை மூலம் 'அகதிகள் அங்கீகாரம்' கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்பது அகதிகளின் அவா.

இலங்கை அகதிகளுக்கு ஆதரவு கொடுக்கும் தமிழக, இந்திய அரசு, அகதிகள் இங்கிருக்கும் வரை அவர்களும் அரசியல் தெளிவு பெறவும் பல பிரதேச மக்கள் ஒன்றிணைந்து தங்களுககுள் ஐக்கியத்தை வளர்க்கவும் இலங்கைப் பிரச்சினைக்கு பங்களிப்பை செலுத்தவும் இவர்கள் மத்தியில் அமைப்புகள் வளர இவர்கள் பிரச்சினை தீர ஒத்துழைப்பு கொடுப்பது மிகவும் அவசியமான ஒன்றாகும்.

ஒற்றுமை, ஒருமைப்பாடு வளர்வதை தடுப்பவர்களும், பிளவுகளுக்கு வழிவகுப்போரும் வன்மையாக கண்டிக்கப்பட வேண்டியது அவசியமான ஒன்றாகும்.

—நாடக நித்திலம்

1ம் பக்கம் தொடர்ச்சி

எடுக்கும் முடிவு தான் சரி என்பதும் பலரதுக் கருத்து.

சமீபத்தில் இவர் தொழிற்சங்க மகாநாடுகளில் கலந்து கொள்ள அமெரிக்க சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு சென்ற போது, இலங்கையில் அடுத்தடுத்து அரசின்இன வாதப் போக்குகள் தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் குறித்து மனம் திறந்து பேசியிருக்கிறார் — அவ்வப்போது இலங்கை பாராளுமன்றத்திலும் இவரது குரல் ஓங்கி ஒலிக்காமலில்லை.

எதிர்வரும் டிசம்பர் 5 ஆம் தேதி இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தேசீய குழு கூட்டமும் நடை பெற விருக்கிறது. இதில் சங்கத்தின் எதிர்கால நடவடிக்கைதொடர்பாகமுக்கியமான முடிவுகள் எடுக்கப்பட விருக்கின்றன.

இதைத் தொடர்ந்து திரு. தொண்டமான் தமது பதவியை விட்டு விலகுவரா?

அதே வேளையில், சமீபத்தில் நடந்த கூட்டம் ஒன்றில் தொண்டமான் பதவியில் நீடிக்க வேண்டும் என்று கூடிஇருந்த மக்கள் கேட்டுக் கொண்டதாகவும் பதவி விலக மாட்டேன் என்று, தொண்டமான் உறுதியளித்துள்ளதாகவும் தகவல் ஒன்று கூறுகிறது.

---

2ம் பக்கம் தொடர்ச்சி

கும் பரவக் கூடிய அறிகுறி தென்படுவதாக பத்திரிகைச் செய்தி ஒன்று கூறுகிறது.

ஆளும் கட்சி அரசியல் வாதிக்குச் சொந்தமான அத்தோட்டததில் நடந்த குண்டர்களின் தாக்குதலில் பலர் காயம் அடைந்து வைத்திய சாலையில் சிகிச்சைப் பெற்று வருகிறார்கள், லயன்களில் வசித்தவர்கள் பாது காப்புக் கருதி வேறு தோட்டங்களில் அகதிகளாக குடியேறியுள்ளனர் தாக்குதலில் தம்மைக் காத்துக் கொள்ள பலர் காடுகளில் ஓடி ஒளிந்து கொண்டிருக்கின்றனர். 500 க்கு அதிகமானோரைக் காணவில்லை என்றும் சுமார் 750 பேர் அகதிகளாக இருப்பதாகரும் அச் செய்திக் கூறுகிறது.

குமரி மாவட்டம்:

## மறுவாழ்வு இலக்கக் கோரிக்கை

மறுவாழ்வு திட்டத்தின்கீழ் திருவனந்தபுரம் - குமரிரயில்வேயில் வேலையில் அமர்த்தம் பட்டுள்ள தாயகம் திரும்பியோர் பணவிளை-சுங்கான் கடையில் வீடுகள் அமைத்துள்ளார்கள். கடந்த ஆறுவருடகாலமாக இந்த குடியிறுப்புக்கு மின்சார வசதி செய்து கொடுக்கப்படவில்லை. மின் சார வசதி போக்குவரத்து மற்றும் பல வசதிகள் இன்றி அவதிபடும் இம்மக்கள் குமரி மாவட்ட ஆட்சித்தலைவருக்கு கீழ்கண்ட கோரிக்கைகளை வைத்துள்ளனர்:-

1. மின் வசதி, குடிநீர் வசதி செய்து கொடுக்கவேண்டும் 2. ரோடு வசதி அமைத்துக் கொடுக்கவேண்டும் 3. இதுவரை கொடுக்கப்படாத கடன் ரூபாய் 2000 உடன் வழங்க வேண்டும். 4. வேலையற்றிருக்கும் இளைஞர்கள் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பளிக்க வேண்டும் என்று கோரி மேற்படி ஆட்சித் தலைவருக்கு (1-10-85) எழுதியுள்ளனர்.

---

Editor & Publisher : T. S. RAJU, Gangaiamman kovi Street, Madras- 600 094. Printed: L. S. Srinivasan Jai Kalidas Press, 29, B.E. Colony, 4th Street, Madras-24. Published in Collaboration with the ISLAND TRUST.

Regd. No. R.N. 42556/83 Regd. No. TN/MS(C)702 MAKKAL MARUVAZHVOO

தாயகம் திரும்பியோரின்
வழிகாட்டி

# மக்கள் மறுவாழ்வு

தொடர்பு கொள்ள :
1, தெற்கு கெங்கையம்மன் கோயில்
2வது தெரு
சென்னை-600 094

# அகதிகள் முகாமில் 'இவர்'களுக்கு அனுமதி இல்லையா?

இலங்கையில் நடக்கும் வன்முறை, இனக்கொலைகளுக்கு தப்பினோம் என்று பலர் இந்தியா வந்து தஞ்சம் அடைகிறார்கள் அரசும். அவர்களை வரவேற்று நிவாரண உதவிகள் அளித்துவருகிறது.

ஆனால் அரசு உதவி அளிக்கும். அதே வேளையில் சம்பந்தப்பட்ட அலுவகங்களில், முகாம்களில் அவர்களுக்கு உரிய உதவிகள் அளிப்பதில் பலசிக்கல்கள் தோற்றுவிக்கப்படுகின்றன.

தற்போது கப்பல்யோக்குவரத்து இல்லை. எப்படியாவது இலங்கையை விட்டு வந்தால் போதும் என்ற நிலையில் தங்கள் கையில் இருக்கும் கொஞ்ச நஞ்ச பொருட்களுடன் அகதிகளாக விமான மார்க்கமாக இந்தியா வந்து சேர்கிறார்கள்-தாயகம் திரும்பியோருக்கும் இதே நிலை தான்.

அப்படி வருகிறவர்கள் இரமேஸ்வரம் வரமுடியாது. அவர்கள் சென்னையிலோ, திருச்சியிலோ தான் வந்து இறங்க முடியும். திருச்சியில் வந்து இறங்குகிறவர்கள் திருச்சி முகாமில் வந்து சேர முடியும். ஆனால் அப்படி வருகிறவர்கள் இங்கு சேர்ந்துக் கொள்ளப்படுவதில்லை அவர்கள், 'மண்டப முகாம் சென்று அங்கு பதிவு செய்து சேர்ந்துக் கொள்ளுங்கள்' என்று அனுப்பிவிடுகிறார்கள்.

இப்படிபட்நிலடைசிறிமாவோ சாஸ்திரி ஒப்பந்தத்தின் மூலம் தாயகம் திரும்பிய சிலர் விமானத்தில் வந்த போது ஏற்பட்டுள்ளது.

இவர்கள் இந்த நாட்டிலேயே வாழப்போகிறவர்கள்; இவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்படுகிறது. அது எந்த முகாமில் வழங்கப்பட்டால் என்ன? அனுமதிக்கப்பட்டால் என்ன?

சமந்தப்பட்டவர்கள் இங்கிருந்து மண்டபமுகாம் செல்ல வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவானேன்?

விமானத்தில் வரும் தாயகம் திரும்பியோருக்குமட்டும் இந்த பிரச்சினைமட்டும்மல்ல.

இலங்கையில் நடக்கும் கலவரத்தில் பலர் வீடிழந்து-வாசவிழந்து-பொருளிழந்து வருகிறார்கள் காது, கழுத்து, கையில் போட்ட நகை நட்டுக்களோடு வருகிறார்கள். ஆனால் விமானத்தின் மூலம் நகையோடு வருகிறவர்கள் கூட முகாமில் அனுமதிக்க மறுக்கப்படுவதாகவும் சொல்லப்படுகிறது.

அப்படி வருகிறவர்கள், தங்கள் நகைகளை உரியவர்களிடம் எடைபோட்டு ரசீது கொண்டு வரவேண்டும். ஆனால் அது ரூபா5000க்கு மேல் இருத்தால் அனுமதிக்க மாட்டோம் என்று முகாம் அதிகாரிகள் தெரிவிக்கிறார்களாம்.

அகதிகள் என்பவர்கள் இந்த நாட்டில் நிரந்தமாக வாழவந்தவர்களல்ல. தற்காலிகமாக தங்கியிருந்து-விட்டு அவர்கள் நாட்டிற்கு திரும்பப் போகிறவர்கள் இனவெறி, நிறவெறி அரசியல் காரணங்களுக்காக வேற்று நாடுகளுக்குச்செல்லும் "அகதிகள்" தற்காலிக உதவி செய்வது ஒரு நாட்டின் கடமை; மனிதாபிமான செயல்.

## 2வது கடனுதவி இல்லையா?

'தகுதி இருந்தும் இரண்டாவது கடனுதவி வழங்கப்படவில்லையே?'

இவ்வாறு திருச்சி மாவட்டத்தில் பல தாயகம்திரும்பியோர் வருந்துகின்றனர்.

தாயகம் திரும்பிவோருக்கு மறுவாழ்வு திட்டத்தின் மூலம் வியாபாரக் கடன் உதவி கிடைக்கிறது. இது இரு தவணையாக வழங்கப்படுகிறது. முதல்தவணை இந்தியா திரும்பும போது மண்டப திச்ருசி முகாம்களில் முதல் தவணை வழங்கப் படுகிறது. இதைக் கொண்டு ஏதேனும் தொழிலை ஆரம்பிக்க வேண்டும்.

அதன் பிறகு தான் 2 வது கடன் கிடைக்கும், இல்லையேல் இரண்டாவது கடன் கிடைக்காது.

இந்த அடிப்படையில் முதல் தவணைபெற்றபெட்டிக் கடைகள், மாடு வளர்த்து பால் வியாபாரம் போன்றவைகள் செய்தும் 2 வது கடன்உதவி மறுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கின்றன.

இதனால் உரிய முறையில் 2 வது கடனுதவி கிடைத்து தாம் ஆரம்பித்து நடத்தும் தொழிலை நிலை பெற செய்யவும் முடியாமல் போய் நிறுத்திவிடும் நிலையும் பலருக்கு ஏற்பட்டுள்ளதை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உணர்ந்து உரிய நடவடிக்கை எடுப்பார்களா? O

## தென்கிழக்காசிய கூட்டம் இலங்கை அகதிகள் பிரச்சினை

தென்கிழக்கு ஆசியாவிலுள்ள வியட்நாம், கம்போடிய லாவோஸ் முதலிய நாட்டு ஏதிலகளுக்கான பணிகளில் ஈடுபட்டிருக்குப் ஏசுசபையைச் சார்ந்த ஊழியர்கள் மறுவாழ்வு பணிகள் சம்பந்தமாக நடத்திய புணர் ஆலோசனை கூட்டம் தாய்லாந்தில் பேங்காக்கில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் இலங்கைத் தமிழ் அகதிகள் பிரச்சினையை குறித்து கருத்து தெரிவிப்பதற்காகவும், இலங்கைத் தமிழ் அகதிகளின் மறுவாழ்வு பணிகளில் ஏசு சபையை ஊக்குவிப்பதற்காகவும் வணபிதா குட்டினா அவர்களும் திரு ஆர். ஆர். சிவலிங்கம் அவா்களும்கலந்துக்கொண்டனர். O